# ஸஹீஹான ஹதீஸைத்தான் பின்பற்ற வேண்டுமா?

இம்தியால் ஸலபி

ஹதீஸ்கள் என்று எந்தச் செய்தியாவது சொல்லப்பட்டால் அவைகளை பின்பற்ற வேண்டும். ஆதாராபூர்வமானதா? பலவீனமானதா? ஸஹீஹானதா? லயீபானதா? என்றெல்லாம் பார்க்கக் கூடாது. கேட்கக் கூடாது என்று சிலர் வாதிடுகின்றார்கள். இவர்களின் வாதம் அர்த்தமற்றவை என்பதை தெளிவுபடுத்தியிருந்தோம்.

இவர்களுடைய எல்லா வாதங்களும் தகர்ந்து போன பின் புதிய வாதமொன்றை முன்வைக்கிறார்கள். அதாவது ஆதாரபூர்வமான ஸஹீஹான ஹதீஸ்களைத்தான பின்பற்ற வேண்டும் என்பதற்கு குர்ஆனிலும் ஹதீஸிலும் ஆதாரம் இருக்கிறதா? எனக் கேட்கிறார்கள்.

அதாவது "என்னுடைய நபியின் செயலை பின்பற்றும் போது ஆதாரவபூர்வமான ஹதீஸைத்தான் பின்பற்ற வேண்டும்" என்று அல்லாஹ் கூறியதாக குர்ஆனில் ஆதாரம் உண்டா? என்பதே இவர்களது கேள்வி.

அறிவுபூர்வமான, கேள்வி போல் இதை கேட்கிறார்கள். இந்த வாதம் அர்த்தமற்றவை. அடிப்படையற்றவை என்பதை குர்ஆனோடு தொடர்புடைய ஒரு பாமரனுக்கும் புரிந்துவிடும்.உம்மை, நேர்மை, நம்பகத் தன்மை பற்றி குர்ஆன் வலியுறுத்தி பேசுவதையும் பொய், நம்பிக்கையின்மை, அறிவின்றி பேசுதல், மோசடி, அவதூறு, அபாண்டம், கட்டுக்கதை, மனோஇச்சையை பின்பற்றல் பற்றி கண்டிப்பதையும் படித்தால் மனிதனது சகல காரியங்களும் நம்பத் தகுந்தவையாக இருக்க வேண்டும் என்ற செய்தி சொல்லப்படுவதை காணலாம். சாதாரன மனிதன் இதில் கவனம் செலுத்தும் போது அல்லாஹ்வுடைய தூதர் விடயத்தில் கவனம் செலுத்தக் கூடாதா?

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِن جَاءَكُمْ فَاسِقٌ بِنَبَإٍ فَتَبَيَّنُوا أَن تُصِيبُوا قَوْمًا بِجَهَالَةٍ فَتُصْبِحُوا عَلَى مَا فَعَلْتُمْ نَادِمِينَ

விசுவாசிகளே! தீயவன் எவனும் உங்களிடம் ஒரு செய்தியை கொண்டு வந்தால் தீர்க்கமாக விசாரித்து கொள்ளுங்கள். (இல்லையேல்) அறியாமையினால் யாதொரு ஜனங்களுக்கும் நீங்கள் தீங்கிழைத்து விட்டுப் பின்னர் நீங்கள் செய்தவைகளைப் பற்றி கைசேதப்படுவீர்கள்.
(49:6)

அல்லாஹ்வுடைய தூதர் நபி (ஸல்) அவர்கள் பற்றி சொல்லப்படும் என்தச் செய்தியும் நம்பத் தகுந்தவையாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கு இந்த ஒரு அடிப்படையை ஓரளவேனும் விளங்கியிருந்தால் இப்படி ஒரு கேள்வியை கேட்டிருக்க மாட்டார்கள். இவர்களுடைய கேள்விக்கு இந்த வசனம் ஒன்றே பதில் கூறுவதற்குப் போதுமானது. ஆனாலும் மேலும் சில ஆதாரங்களை இவர்களது மன அமைதிக்காக எடுத்துக் காட்டுகிறோம்.

அல்லாஹ்வுடைய எல்லாத் தூதர்களும் மக்கள் மத்தியில் மார்க்கத்தை எடுத்துச் சொல்லும்போது தகுந்த ஆதாரங்களை எடுத்துக் கூறியே பிரசாரம் செய்தார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

قُلْ إِنِّي نُهِيتُ أَنْ أَعْبُدَ الَّذِينَ تَدْعُونَ مِن دُونِ اللّهِ قُل لاَّ أَتَّبِعُ أَهْوَاءكُمْ قَدْ ضَلَلْتُ إِذًا وَمَا أَنَاْ مِنَ الْمُهْتَدِينَ

قُلْ إِنِّي عَلَى بَيِّنَةٍ مِّن رَّبِّي وَكَذَّبْتُم بِهِ مَا عِندِي مَا تَسْتَعْجِلُونَ بِهِ إِنِ الْحُكْمُ إِلاَّ لِلّهِ يَقُصُّ الْحَقَّ وَهُوَ خَيْرُ الْفَاصِلِينَ

அல்லஹ்வையன்றி நீங்கள் பிரார்த்திப்போரை வணங்குவதை விட்டும் நிச்சயமாக நான் தடுக்கப்பட்டுள்ளேன் என்று நபியே (முஹம்மதே) கூறுவீராக! உங்கள் மனோ இச்சைகளைப் பின்பற்ற மாட்டேன் . (அப்படி பின்பற்றினால்) வழி தவறி விடுவேன். நேர் வழி பெற்றவர்களில் ஒருவனாக நான் ஆக மாட்டேன் என்று கூறுவீராக.

நான் என் இரட்சகனிடமிருந்து வந்த சான்றுடன் (ஆதாரத்துடன்) இருக்கிறேன். அதைப் பொய்யெனக் கருதுகிறீர்கள். நீங்கள் அவசரப்படுவது என்னிடம் இல்லை. அதிகாரம் அல்லாஹ்வுக்கே தவிர வேறு இல்லை. அவன் உண்மையை உரைக்கிறான். அவன் தீர்ப்பளிப்போரில் மிகச் சிறந்தவன் என்று கூறுவீராக !

(6:56 - 57)

قُلْ هَـذِهِ سَبِيلِي أَدْعُو إِلَى اللّهِ عَلَى بَصِيرَةٍ أَنَاْ وَمَنِ اتَّبَعَنِي وَسُبْحَانَ اللّهِ وَمَا أَنَاْ مِنَ الْمُشْرِكِينَ

இதுவே என்து பாதை, நானும் என்னைப் பின்பற்றியோரும் தெளிவான ஆதாரத்தில் இருந்து கொன்டு அல்லாஹ்வை நோக்கி அழைக்கிறோம். அல்லாஹ் மிகத்தூயவன். நான் இணை கற்பிப்போரில் ஒருவனல்ல என நபியே கூறுவீராக !

(12:108)

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து வந்த 'வஹீ'யை ஆதாராமகக் கொண்டு மக்களுக்கு அழைப்பு விடுக்கிறார்கள். மக்கள் வணங்குகின்ற வணக்கத்திற்கு எந்த அங்கீகாரமும் இல்லை. ஆதாரமுமில்லை. ஆதாரமில்லாத வணக்கத்தை நான் வணங்க மாட்டேன் என்பதை மிகத் தெளிவாகக் கூறுகிறார்கள். இவ்வாறு கூறுமாறும் அல்லாஹ் கட்டளையிடுகிறான் என்பதை இந்த வசனங்களிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

நபி (ஸல்) அவர்களும் அவர்களைப் பின்பற்றுபவர்களும் (ஸஹாபாக்களும் முஸ்லிம்களும்) ஆதாரத்தை முன்வைத்தே அல்லாஹ்வின் பால் அழைப்பு விடுக்கிறார்கள். அதன் படியே பின்பற்றவும் செய்தார்கள் எனும்போது நபியை பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் இவர்கள் "நபியின் பெயரால் சொல்லப்படும் ஹதீஸுக்கு ஆதாரம் தேவையில்லை" எனக் கூறுவது அறிவுடமையாகுமா? இப்படிக் கூறுபவர்கள் நபியை உண்மையாகப் பின்பற்றக் கூடியவர்களாக இருப்பவர்களா? மார்க்கம் ஆதாரப்பூர்வமாக அணுகப்பட வேண்டும், பேசப்பட வேண்டும் என்பதற்கு மிகத் தெளிவான சான்றுகள் இவை.

சான்றுகள் தொடரும் இன்ஷா அல்லாஹ்